DUPLICATE


# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

**பத்திரிக் கிரயம்.**
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: „ ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி: „ ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**விளம்பர விகிதம்.**
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
„ அரைக்கலம் ரூ. 5 00
„ கால்கலம் ரூ. 3 15
„ ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ருடு } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஷூ கார்த்திகைமீ" எஉ ( 1923 நவம்பர் 22 ) வியாழக்கிழமை } இலக்கம்—ருக.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிறா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்;
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

## (Standard Tiles.)

இவை வேரேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும் இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H 18)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

**ரசமணி.**

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென் மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மோகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

**மன்மத கோலாகலக் குளிகை.**

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

**மூலத்திற்கு**
**குருநாகபஸ்பம்**

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சிழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

**இருமலுக்கு**
**குருதாளக பஸ்பம்.**

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு காட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

**பிரமேக நிவாரணி**

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

**மாந்திரீக சந்து.**

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சந்து 1-க்கு ரூபா 2. 6 சந்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை பரீக்ஷிக்க ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2

**பிளேக் மாத்திரை.**

கூரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41.) வைத்தியசாலை, பழனி. S. I.

காசி,நாடா சேலை

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்குந் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

**வெள்ளிக்கெண்டைச்சால்வை.**

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் லைஸ் நூலினால் செய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

யாழ்ப்பாணம்

சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற

## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம் (சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் „ | கடு |
| மூன்றாம் பாலபாடம் „ | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ந.0 |
| ஐந்தாம் பாலபாடம் ... ... ... | ௬0 |
| ஆறாம் பாலபாடம் ... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்" வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது. விளக்கத்துடன் | எடு |
| கலாமஞ்சரிவிளக்கப்(மாத்திரம்) | ந.0 |
| கிருட்டிணன்றூது, உரையுடன் | அடு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ந |
| ஆத்திசூடி ... ... ... | ந |
| வெற்றிவேற்கையுரை ... ... | ந |
| வாக்குண்டாமுரை ... ... ... | ந |
| நல்வழியுரை .... ... ... ... | ந |
| நன்னெறியுரை ... .... ... ... | ந |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினாவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும் ... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காண்டம் ... ... ... | க-உடு |
| றவ்காண்டம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ந |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ந |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ந |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி நாவரஜீவியாயிருந்த லேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் „ | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ந |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப் பெற்றது... ... ... ... ... | கடு |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்ருனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை,

## ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
(Q. 45) காரியதரிசி.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

# சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சாணுக்களும், நயம் 120 கெ. 100 கெ. 80 கெ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான மூர்த்திகள்போட்டதும் முக்கியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமூர்த்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம், ஜவுளி சேலம், Javuli Salem. } கா கோ. அ. வெ. கு ஓபுளிசெட்டியார் & Co,.
ஜவுளிவியாபாரம் சொகை சேலம்.
(Q. 44)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதகிரு
கார்த்திகைமீ 7வ வியாழக்கிழமை.

## ஜீவனுக் கிரங்காதார் சிவனுக் கிரங்குவரா?

இவ்வுலகத்திலே இருவினைக் கீடாக காணுபேதமான தேகங்களை எடுத்துழலும் ஆன்மகோடிகளுக் கிரங்காதவர்கள் சிவபெருமானிடத்திலே ஒருபோதும் அன்புடையராகமாட்டார்கள். உலகில் யோனி வாய்ப்பட்டுப் பிறக்கும் "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்." அப்பராபரன் சந்நிதியில் இயங்கும் உயிர்களுடைய "உடல்கள் ஈசன்கோயில்க"ளாகும். அன்றியும் "உள்ளந் திருக்கோயில் ஊனுடம்பாலயம்" என்றும் சமயசாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலின் எவ்வித ஜீவபிராணியும் எடுத்துக்கொண்ட தேகமானது ஆலயமாகுமென்பதும், அதனுள்ளே வசிக்குஞ் ஜீவன் சிவபிரான் சந்நிதியிலுள்ளதென்பதும் பெறப்படுகின்றன. ஆகவே இவ்விதமான எந்த ஆலயத்தையும் முரித்தும் வருத்தியும் வெட்டிக் கொன்றும் தின்றும் சாண்வயிற்றை வளர்ப்பது சிவத்துரோகமாகுமென்பது எங்கள் சமயசாஸ்திரத் துணிபு. இவ்வாறு சிவத்துரோகஞ் செய்பவர்கள் ஜீவர்களாலும் வெறுக்கப்பட்டு, சிவபிரானாலும் புறக்கணிக்கப்படுகின்றார்கள். கொல்லா விரதத்தை மேற்கொண்டொழுகும் ஒருவனை எல்லாவுயிரும் கைகூப்பி வணங்குமென்றும், சிவபிரானைக் "கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணி" யென்றும் மகான்கள் கூறியிருக்கின்றார்கள். ஒவ்வொருநாளும் ஜீவர்கள் வசிக்கும் ஆலயங்களை அவர்கள் வருந்தித் துடித்துப் பதைக்கக் கொன்று தின்று ஜீவர்களுக் கிரங்காது காலங்கழித்து, சிவனுக்கிரங்கித் திருமடங்கட்டுவதும் மகாமண்டபங் கட்டுவதும் சிவப்பிரதிட்டை செய்வதும் கோபுரங் கட்டுவதும் இன்னும் வேறுவேறு தருமங்கள் செய்வதுமாகிய இவைகளினால் அடையும் பயன் ஒன்றுமில்லையாகும். உதரத்தை நிரப்ப உயிரைக் கொன்று உலகம் வியக்க உமாபதியைப் பிரதிஷ்டை செய்யும் அறியாமையை வேரோடு களைதல் வேண்டும். இக்காலத்தில் அநேகர் ஆடிச் செவ்வாய் ஆவணி ஞாயிறு புரட்டாதிச் சனி ஐப்பசி வெள்ளி கார்த்திகைச் சோமவாரம் முதலிய விசேட தினங்களிலும் உற்சவ காலங்களிலும் மாத்திரம் ஜீவர்கள் வசிக்குங் கோயில்களை இடித்து வருத்திக் கொன்று தின்னுதவிடுத்து ஆலயங்களுக்குச் சென்று சுவாமிசந்நிதானத்திலே ஏறக் குவித்த கைகளோடு நின்று "மூவிரு முகங்கள் போற்றி" என்றும் "முகம்பொழி கருணை போற்றி" என்றும் "சேவலும் மயிலும் போற்றி" என்றும் தோத்திரஞ் செய்வதைக் காண்கின்றோம். சேவலை வதைத்துக் கொன்று தின்று கடவுள் சந்நிதானத்திலே நின்றுகொண்டு சேவலுக்குத் தோத்திரஞ் செய்வதை உற்று நோக்கினால் அச் சேவல் வயிற்றுக் கிரையாக வந்ததற்காக அதற்குச் செலுத்தப்படும் ஸ்துதிபோலல்லவா இருக்கிறது. அச்சேவல் தாய்கீழ்க் குஞ்சாக இருக்கிற காலத்திலே அக்குஞ்சு ஒரு கருடனால் கவரப்படுமாயின் அதனுடைய தாய்க்கோழி அதை மீட்கும்பொருட்டு (அத்தியாவசியகாலத்திலன்றி ஒருபோதும் உபயோகியாத) தனது சிறகுகளை அடித்து விரித்துச் சத்தமிட்டு வெகுகஷ்டத்துடன் அக்கருடனைத்தொடருவதைப் பார்க்கும்பொழுது அற்பபிராணியாக விருந்தாலும் "குரங்குக்குந் தன் குட்டி பொன் குட்டி" என்றதுபோலத் தன் குஞ்சைக் காப்பாற்றுவதில் எவ்வளவோ சிரத்தையெடுக்கிறது. மானிட தேகமெடுத்தோர் பகுத்தறிவுடையோராகவிருந்தும் ஜீவராசிகளிடத்திலே இரக்கமில்லாதிருப்பார்களாயின் அவர்களெடுத்த ஜென்மம் கடைச்சென்மமென்றே கருதப்படும். ஜீவர்களில் மானிட தேகமெடுத்தவர்களே மேலானவர்களென்று எண்ணப்படுதலினாலும் அம் "மானிடராக்கை வடிவுசிவலிங்கம்" ஆதலினாலும் மிருகங்கள் நீர்வாழ்வன ஊர்வன பறப்பன முதலிய கீழான தோற்றங்களை எடுத்துப் பிறந்த ஜீவர்களை வருத்துதலும் கொல்லுதலும் உண்பதும் ஒருபோதுங் கூடாவாம். ஜீவர்களிடத்திலே எள்ளளவேனும் இரக்கமில்லாதவர்கள் சிவபிரானிடத்திலே அன்புடையராகமாட்டார்கள்; அப்பரமேஸ்வரனுடைய திருவருட் பிரசாதத்தையும் ஒருபோதும் பெறமாட்டார்கள்.

## தமிழ்ப்பாஷையிற் புதுநூல்கள்.

தமிழ்ப்பாஷையிலுள்ள புராதன இலக்கியநூல்களை ஐரோப்பிய பண்டித சிரோமணிகளும் மிகவும் வியந்து நயந்து பாராட்டியிருக்கின்றனர். உலகத்திலுள்ள மற்றெந்தப் பாஷையிலும் தமிழிலுள்ள இலக்கியநூல்களினும் மேலானவை என்று கூறத்தகும் நூல்களில்லையென்பதே பல பாஷா நூல்களையுங் கற்று அவைகளிற் தக்க பாண்டித்தியம் பெற்ற பேரறிஞர் கருத்து. இத்தகைய மகத்துவம் வாய்ந்த அரியபெரிய நூல்கள் நமதுசுவபாஷையிலிருப்பது தமிழ்மக்கட்குற்றதோர்பெருஞ் சிலாக்கியமே. ஆயின் அந்நூல்களை மாத்திரங் கற்றுத் தேறுவது எத்துணைப் பெரும் நன்மையாயினும் அஃது அங்ஙனங் கற்போரின் பூரண அறிவுவிருத்திக்குப் போதியதன்று. பழைய தமிழ்நூல்களைச் சிரத்தையோடுங் கற்பவர் அதில் வல்லவராவரன்றித் தற்காலத்தில் அற்புத விருத்தியடைந்துவரும் பற்பல விஷயங்களைக் குறித்த பொது ஞானத்தில் தக்க விருத்தி பெறார். தமிழை மாத்திரங் கற்பவர் அத்தியாவசியகம் அறியவேண்டிய எத்தனையோ பல விஷயங்களில் தமதறிவை விருத்தியாக்கற்கு அவ்விஷயங்கள் மேல் எழுதப்பட்டுள்ளனவாகிய பல்வேறுவகை நூல்களைக் கற்கவேண்டியவராகின்றார். இந்நூல்கள் தமிழிற் பெரும்பாலுமில்லை. இஃது நமது அருமைத் தமிழ்ப்பாஷைக்குற்றதோர்பெருங்குறைவன்றோ. இந்தியாவிலும் இலங்கையிலுந் தற்காலம் வழங்கிவரும் மற்றெப்பாஷையினும் தமிழ்ப்பாஷை இலக்கியநூற் சிறப்பிற் பெரிதுஞ் சிரேஷ்டமுடையதெனினும், காலவிருத்திக்கேற்ப அறிஞராலியற்றப்பட்ட புதுநூல்களை யுடையதாயிருப்பதிலுஞ் சிரேஷ்டமாய்க் காணப்படவில்லை. தமிழிலுள்ள பழைய நூல்களை மாத்திரம் அவாவிக் கற்போர் மிகச் சிலரேயாக, அவ்விதங் கற்பவரும் தாம் பெற்ற அறிவைக் குறித்து மமதைகொண்டு தாங் கற்கும் வழியில்லாது தமக்கு மறைபொருளாயிருக்கும் பற்பலநூல்களைப்பற்றி ஞானம் சிறிதுமிலராயிருக்கின்றனர். இப்பெருங் குறைக்கு அவர்கள் உத்தரவாதிகளல்லர். ஏனெனில், ஆங்கில பாஷையில் எழுதிப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அறிவுவிருத்திக்குரிய பெருந் தொகையான நூல்கள் ஆங்கிலங் கல்லாது தமிழை மாத்திரங் கற்பவர்க்கு எவ்வாறு சித்திக்கும்? இக்குறையை நிவிர்த்திசெய்ய ஆங்கிலந் தமிழ் என்னு மிருபாஷைகளையும் நன்கு கற்றவரே வல்லவராவர். அவர்கள் தாம்பெற்ற ஆங்கில அறிவின் பயனுய் அப்பாஷையிலிருக்கும் அறிவு நூல்களுள் விசேடமானவற்றைத் தமிழிலெழுதி அச்சிட்டுப் பரப்புதல் மிக லோகோபகாரமாயும் தமிழ்ப்பாஷையின் அபிவிருத்திக்குப் பெரிதும் உதவிபுரிவதாயுமிருக்குமல்லவா? இது செய்யாது "பசித்தவர் பழங் கணக்குப் பார்த்தாராம்" என்றவாறு நமது சொந்தப் பாஷையிலுள்ள அற்புதமும் உசிதமுமான நூல்களைப்பற்றிப் பெருமைகொள்வது தற்காலத்துக்கேற்ற அறிவு விருத்திக்கு யாது முதவிபுரியாது.

வித்தியாகோட்டியாரின் பிரமாணங்களின்படி தமிழ்வித்தியாசாலைகளில் பொது அறிவுவிருத்திக்குரிய சில பாடங்களைச் செவ்வனே கற்பிப்பதற்குப் புதுநூல்கள் தமிழில் அவசியமிருத்தல்வேண்டும். இஃதன்றி கற்றதமிழ்மக்கள் அறிவைவிருத்திசெய்தற்கும் பொழுதுபோக்கற்கும் நானாவிதமான வாசகப்புத்தகங்கள் தேவை. இக்குறைவு மிக அவசியம் நிவிர்த்திசெய்யப்படுவதொன்று. தமிழ் ஆங்கிலமென்னும் இரு பாஷைகளையும் நன்கு கற்றவரே இப்பெருந் தேவையை அநுகூலத்துடன் நிவிர்த்தி செய்தற் குரியராயிருக்கின்றார். நாம் கூறியவண்ணம் புதுநூல்களை யாக்கி அச்சிட்டு வெளியிடுவது அவர்மேற் பொறுத்த பெருங் கடனாகின்றது. இவ்விஷயத்தில் அரசாட்சியாருடைய திரவியோபகாரமும் சன்மானமும் பெரிதும் வேண்டப்படுகின்றன. சுவயபாஷா வித்தியாசாலைகளைத் தம்பொறுப்பிலெடுத்து நடத்த விரும்பி நிற்கு மாசினர் அவ்வனுவசியக முயற்சியை யெண்ணுது தமிழையும் பொது அறிவையும் விருத்திசெய்தற்குரியனவாய்ப் பெரிதும் வேண்டப்பட்டு நிற்கும் பல்வகைப் பெருந்தொகை நூற்களுட் சிலவற்றையேனுந் தக்க தமிழறிஞரா லியற்றுவித்து அச்சிற்புகுத்தி வெளியிடும் பெருமுயற்சியைச் சிரத்தையோடு புரிவரேல் அது மிகுந்த அநுகூலமாயும் தகுந்த ஜனோபகாரமாயும் முடியுமென்பதற்குச் சந்தேகமின்று.

ஆங்கில பாஷையிற் பல்லாயிரக் கணக்கான புத்தகங்கள் மலிந்து பொலிந்து கிடக்கவும் பின்னும் புதுப் புதுப் புத்தகங்கள் முடிவின்றி யோய்வின்றி எழுதி அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. ஆங்கில பாஷையின் அளவுக்கு மேற்பட்ட அபிவிருத்தியமான செல்வாக்கே நமதருமைத் தாய்ப் பாஷையாகிய தமிழை அலட்சியஞ் செய்வதற்கும் அதன் பயனுய்த் தமிழிற் புதுநூல்களியற்றும் பெருமுயற்சியை அலட்சியஞ் செய்வதற்குங் காரணமாயிருக்கின்றது.

நாம் மேற்கூறியவாறு தமிழிற் புதுநூல்களை இயற்றி அச்சிட்டு வெளியிடாது காலந் தாழ்த்தும் வரைக்கும் தமிழ் மக்களுள் அறிவு விருத்தி குறைவுற்றிருப்பதன்றித் தமிழ்ப்பாஷைப் பிரயோகமுங் குன்றியே நிற்கும். ஆதலின் நமது தேசத் தமிழபிமானிகள் தம்மாலியன்ற முயற்சி செய்து அரசினரின் சகாயத்துடன் தமிழ்ப்பாஷையிற் பலவித புதுநூல்களை இயற்றி அறிவையுஞ் செந்தமிழையும் விருத்திசெய்வா ரென்று காத்திருக்கின்றேம்.

## ஸ்ரீமத் பாஸ்கராசார்யர்.

(சோதிடசலாகிதியென்னும் பத்திரிகையிலிருந்து அநுவதித்தது)

(முற்றொடர்).

1-வது கோளாத்தியாயத்தில் 13 பிரிவுகளிருக்கின்றன. அவை முறையே கோளபிரஸம்ஸை, கோளசொரூபபிரஸ்னை, புவனகோசம், மத்தியகதிவாசனை, ஸ்புடகதிவாசனை, கோளபந்தம், திரிபிரஸ்னவாசனை, கிரகணவாசனை, திருக்கர்மவாசனை, சிருங்கோன்னதிவாசனை, இயந்திரவாசனை, ருதுவர்ணனை, பிரஸ்னாத்தியாயம் என்பவைகளாகும். இவைகள் தவிர ஜியாவினுடைய உற்பத்தி என்னும் ஓர் அத்தியாயம் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த கிரந்தத்திற்கு விருத்தியுரையும் கிரந்த கர்த்தாவினாலேயே செய்யப்பட்டிருக்கின்றது. அதில் அநேக அருமையான கணித விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீமத் பாஸ்கராசாரியருடைய கொள்கைப்படி இந்தப் பூமியானது யாதொரு ஆதாரமுமின்றித் தன்னுடைய சக்தியினாலேயே சூன்னியத்தி லிருக்கின்றதாக ஏற்படுகின்றது. இவ்விஷயத்தில் அவருடையவாதம் எப்படியென்றால், ஒருவஸ்துவுக்கு ஆதாரமிருப்பதாக நம்பினால் அந்த ஆதாரத்துக்கு மற்றொரு ஆதாரம் வேண்டியதாயிருக்கின்றது. இப்படி வரிசையாக ஒரு ஆதாரத்திலிருந்து மற்றொரு ஆதாரத்தைக் கற்பித்துக்கொண்டுபோனால் மூல ஆதாரத்தை ஆதாரமற்றதாகவே பாவிக்க வேண்டியதாயிருக்கின்றது. இந்தப்படி இவ்வளவு தூரம் கற்பித்துக்கொண்டு போவதைக் காட்டிலும் பூமிக்கே ஆதாரமில்லை என்று சொல்லிவிட்டால் என்ன தோஷம்? மேலும் யாதொரு ஆதாரமுமிருப்பதாகவுங் காணப்படவில்லை. பூமியானது எட்டு வஸ்துக்களில் ஒருவஸ்து. மேலும் ஒவ்வொரு வஸ்துவுக்கும் இயற்கையிலேயே ஒவ்வொரு சுபாவமுண்டு. எப்படியெனின், அக்கினிக்கு உஷ்ணத்தை உண்டாக்குந் தன்மையும், சந்திரனுக்குக் குளிர்ச்சியைத் தரும் தன்மையுமாம். இவைபோலவே பூமிக்கு அசலமாயிருக்குந் தன்மை யுண்டென்பது அவர் கொள்கை. பூமி விழுந்துகொண் டிருக்கின்றதென்று நம்பினால் அது எவ்விடத்திற்குப் போய்விழும். பூமியிலிருக்கும் ஆகருஷண சக்தியின் வேலை பதனம் என்று சொல்லப்படும். சூன்யத்தில் எந்த பெரிய வஸ்துவினால் பூமி ஆகருஷிக்கப்படும். இலகுவான வஸ்துவும் பளுவான வஸ்துவுமாகிய இரண்டு வஸ்துக்கள் ஒரே சமையத்தில் மேலேயிருந்து விழுந்தால் பளுவான வஸ்துவே முதலில் பூமியில்வந்து விழுவதாக நமக்குக் காணப்படுகின்றது. ஆதலால் மிகவும் பளுவாகிய பூமியும், இலகுவாகிய மற்றைய பொருளும் கீழே விழுவதனால் வியவதான கிரமத்தினால் விருத்தியை அடையும்; அதாவது எந்த வஸ்துவும் பூமியில் விழாமல் மேலேயே இருக்கும். ஆதலால் பூமி ஆகருஷிக்கப்படுவதனால் கீழே விழுகிறதில்லை.

மேல்நாட்டு வித்வான்களுக்கும் ஸ்ரீமத் பாஸ்கராசாரியருக்கும் அபிப்பிராயபேதமுண்டு. இந்தக் காரணத்தினால்தான் கிறிஸ்துசகம் ௧௨00 வருஷத்தில் பூமிக்கு சலனகதியுண்டென்பதை யாரும் நம்பவில்லை. பூமியானது தன்னைத்தானே சுற்றுகின்றதென்பதும், சூரியனைச் சுற்றுகின்றதென்பதும் ஆகிய இரண்டு கதியும் பூமிக்குக் கிடையாதென்பது ஸ்ரீமத் ஆசாரியருடைய தேர்ந்த கொள்கை. கிறிஸ்துசகம் ௧௫00ல் கோபர்னிகஸ் என்பவரால் பூமிக்குச் சலனகதி யுண்டென்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த உண்மை இதற்கு எத்தனையோ வருஷங்களுக்கு முன் பாரத மக்களாகிய நம்மவர்களால் அநுசரிக்கப்பட்டு வந்ததென்பதை நமது கணித சாஸ்திரங்களை நுண்மதிகொண்டு ஆராய்ந்தால் தெளிவாய் உணர்ந்தறியலாம். பதினாறுவது நூற்றாண்டுகளுக்கு முன் தாலமி சித்தாந்தத்தை அனுசரித்து ஐரோப்பியர்களும் பூமிக்கு சலனமில்லை என்று நம்பியிருந்தார்கள். இவ்விரு மேல்நாட்டு வானசாஸ்திரிகளுக்குமுன்னிருந்த ஸ்ரீமத் ஆரியபட்டர் தமது ஆரியபடீயம் என்ற நூலில் பூமிக்குச் சலனகதி யுண்டென்பதை விளக்கியிருக்கின்றார். உண்மையில் பூமிக்குச் சலனகதியுண்டென்று அநேக நியாயங்களால் அறியப்படுகின்றது. இதுவிஷயத்தைத் தனியே விளக்கப்படும். ஆனால் நாம் ஆசாரியரைவிட சிறந்த மதியூகிகள் அல்லவென்பது நன்குணர்ந்த விஷயமாகும். ஸ்ரீமத் பாஸ்கராசாரியருடைய சிறந்த யுக்தி யொன்று இங்கு கூறப்படுகின்றது. அதாவது, ஓர் பளுவான வஸ்துவும், ஓர் இலகுவானவஸ்துவும் ஆகிய இவ்விரண்டும் ஒரேசமையத்தில் மேலே இருந்து விழுமாயின் பளுவான வஸ்து முதலிலும், இலகுவான வஸ்து பின்பும் பூமியில் வந்து விழுகின்றன. ஆனால் எவ்விடத்தில் வாயு இல்லையோ அவ்விடத்தில் இரண்டும் ஒரேசமையத்தில் விழும் என்பதேயாம். இதைப் பெரிய வித்வானாகிய நியூடன் என்பவரின் கினிபாலக் என்ற பெயருள்ள பிரமாணத்தினால் அறியப்படுகின்றது. இத்தியாதி விஷயங்களால் நமது ஆசாரியருடைய சரித்திரப் பொழிப்பும், அவாது ஆக்மநூலாகிய சித்தாந்த சிரோமணியின் மாட்சியும் ஒருவாறு நேயர்கள் அறிந்துணரஏதுவாயிருக்கும். இனி அவருடைய வாசஸ்தானத்தைப்பற்றி சிறிது ஆராய்வோமாக. (வரும்.)

## உலகம் பலவிதம்.

(ஒருவரெழுதி யுதவியது.)

சிவாலய தரிசனப் பேறு பெற்ற சிவனடியார்கள் அன்புடனே செலுத்தும் காணிக்கையானது நாலு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் குடிகாரருக்கும் ஒருபாகம் பொலிஸ்கோட்டிற்கும் ஒரு பாகம் டிஸ்திறிக்கோட்டுக்கும் ஒரு பாகம் சுப்பிறீங்கோட்டுக்கும் போகிறது.

* *

தாசி ஆட்டத்துக்குப் பதிலாகக் கூத்தாடிகள் பெண் வேடம் பூண்டு ஆலயங்களில் நடனமாடும் ஒரு விபரீத முறை புதிதாகத் தோற்றியிருக்கிறது. உற்சவாசாரியர் அபிலேகபூரணகுருவும் உபயக்காரரும் ஊரவர்களும், மட்டி மடையன் பேதை மிலேச்சன் மூர்க்கனுமானால் விபரீத முறைகள் இன்னுமனேகமாகத் தோற்றும் போலத் தெரிகிறது; என் செயலாம்.

* *

கல்லு வீடுகட்டவும், ஆலயங் கட்டவும் பிரயோசனப்படும்; கழுதை அழுக்கு வஸ்திரப் பொதியைச் சுமக்கும்; மலம் பன்றிக்கு உணவாகும்; மாடு நிலம் உழுவதற்கும், வண்டியிழுப்பதற்குமாகும்; பிணம் நாய் நரி கழுகு முதலியவற்றிற்கு உணவாகும்; குட்டிச்சுவர் மாடுகள் உரோஞ்சுதற்கும மறைசுவராதற்கும் பிரயோசனமாகும்; துடைப்பம் வீடு வாசல் முற்றம் முதலியனவற்றைப் பெருக்குதற்காகும்; உலுத்தனோவென்றால் ஏதொரு விஷயத்துக்கும் பிரயோசனப்படமாட்டான். அவனைக் குறித்துப் பேசுமிடத்தில் அவனுக்கு அவனே சரியாவன்.

* *

முருகனும் மதுவிலக்குப் பிரசாரகரும்.

மு. நயினார்! எங்கள் கள்ளுத்தவறணையை எடுத்துவிட்டீர்கள், உங்கள் புண்ணியத்தினாலே என்னுடைய கஷ்டங்களெல்லாம் நீங்கிவிட்டது.

பி. என்ன சங்கதி?

மு. நயினார்! ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு நாளும் உழைத்து மட்டுக்குமிஞ்சிக் குடித்துக் கடனும்பட்டுப் பட்டினியுங் கிடந்தேன். சென்ற வருஷம் நல்லாய் உழைத்தேன்; கடனுமில்லை; பட்டினியுமில்லை; ரொக்கமாகவும் இருநூற்றிருபது ரூபா வைத்திருந்து குடிநிலமில்லாதிருந்த நான் இப்போ மூன்று பரப்பு வாங்கி ஒரு கொட்டில் கட்டியிருக்கிறேன். பிரபூ! நீங்கள் நெடுநாளைக்குமகாராசனாகவிருக்கவேண்டும்.

பி. முருகா இப்பொழுதுதான் புத்தி வந்ததா?

மு. நயினார்! நயினார்!! என்னுடைய மூத்தமகளை நல்லூரில் ஒருவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தேன். அவன் குடிவெறியினாலே கெட்டுப்போனான். அவனுக்கு நாலு குழந்தைகள். நித்திய பட்டினியும் நித்திய சச்சரவுமாகவிருக்கிறது. அங்கே வரிவிருக்கிற தவறணையையும் எடுத்துவிட்டீர்களென்றால் செய்த புண்ணியத்தோடு பெரும் புண்ணியமாக விருக்கும்.

பி. முருகா! நீ கவலைப்படாதே. அத்தவறணையையும் எடுப்பதற்குக் கடவுள் கிருபைசெய்வார்.

## சமாசாரம்.

காலநிலை:—பகலில் வெய்யில் அகோரமாகவும் இரவில் பனிபதிகமாகவுமிருக்கிறதினால் ஊர்ச்சுகமும் போதிப்படக் குறைவாயிருக்கிறது. மழையின்மையால் நெற்பயிர்கள் வாடுகின்றன.

முத்துக்குளிப்பு:—மரிச்சுக்கட்டிக்குச் சமீபத்திலேயுள்ள கடலில் முத்துக்குளிப்பதற்கேற்ற ஒழுங்குகள் அரசினராற் செய்யப்படுகின்றன. முத்துக்குளிப்போர் பார்சியாக் குடாவிலிருந்து கொண்டுவரப்படுவர்.

கிளேறிக்கல் பரீக்ஷை:-கிளேறிக்கல்பிரிவின் இரண்டாவது வகுப்பிற் பிரவேசிக்க விரும்பும் மாணவர்களுக்குரிய பரீக்ஷை 1924-ம் வருடம் எப்ரல்மீ 22-ஆ நடைபெறும். விபரம் அறிய விரும்புவோர் 1923-ம் வருடம் நவம்பர் மாதம் 16-ந் திகதியில் வெளிவந்த 'கசற்' பத்திரிகையில் பார்க்கவும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் குருபூசை:-நிகழும் கார்த்திகை மீ ௩௰ ௳ வெள்ளிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானது குருபூசைத்தினமாகும். இக்குருபூசையைநடத்துதற்கு வேண்டிய முயற்சிகள் கொழும்பு விவேகானந்தசபையாராற் செய்யப் படுகின்றன. அன்று நாவலரவர்களது திருவுருவப்படமொன்று சபையில் வைக்கப்படும். அவர்களது சரித்திரமும், யாழ்ப்பாண நாட்டுக்கும் சைவ சமயத்துக்கும் தமிழ்மாதாவுக்கும் அவர்கள் செய்த சேவையின் பெருமையும் பிரசங்கிக்கப்படும்.

றய் பகதூர் V. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள்:—சென்னை ஹை கோட்டில் அரசாங்க மத்தியஸ்தராகவிருந்த ஸ்ரீ மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் ஹை கோட்டில் பிரதி நீதிபதியாக நியமனம் பெற்றிருக்கின்றனர். இவர் யாழ்ப்பாணத்தில் ஓர் பிரபல குடும்பத்தைச் சார்ந்தவர். பிள்ளை அவர்கள் தமது கடமை பார்ப்பதில் திறமையும் சர்வசனமதிப்பும் பெரிதும் உடையர். இவர் மேலும் மேலும் உயர்ந்த உத்தியோகங்களை வகித்து இனிது வாழும் பொருட்டுச் சிவபிரான் திருவருள் பாலிப்பாராக.

ஆற்றிலமிழ்ந்திறந்தல்:—ஜாயலையில் வசிக்கும் ஒருசிங்களவன் ஜாயலை ஆற்றில் நீராடும் பொழுது நீரோட்டத்திலகப்பட்டுக் குற்றுயிரோடு மீட்கப்பட்டு சற்றுவேளையில் உயிர் துறந்தான்.

ரசாயனவாயு(Gas)வினால் நேர்ந்தமரணம்.-ஹற்றனில்வசிக்கும்ஒருவன் புகையிரதப்பாதையிற் கிடந்த கரித்துண்டுகளை எடுத்து குளிர் காய்தற்காகத் தகரத்தினுற்செய்யப்பட்ட அடுப்பிலிட்டுத் தீமூட்டியபின் கதவுகளையும் ஜன்னல்களையும் பூட்டிவிட்டு நித்திரைசெய்தான். அடுத்தநாட் காலையில் அவன் வெளியே வராதிருப்பதைக்கண்ட அவ்வீட்டிலுள்ளோர் கதவை உடைத்துத் திறந்து பார்க்கும்போது அவன் ஸ்மரணையற்றுக்கிடந்தான். உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டான். சிகிச்சை செய்வதற்குக் காலதாமசமானதினால் இறந்துவிட்டான்.

உவேல்ஸ் இளவரசர்:—எங்கள் இராசகுமாரர் அடுத்த வருஷத்தில் தென் ஆபிரிக்காவுக்கு விசயஞ் செய்வதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

வெள்ளப்பிரவாகம்:—இங்கிலாந்திற் பெருமழை பெய்தமையினாலே நிபின் நதி யானது அணைகடந்து பெருக்கெடுத்து 300 வீடுகளுக்கு மேல் அழிவு செய்துவிட்டது.

பெண் நியாயவாதிகள்:—இங்கிலாந்தில் சமீபத்தில் நடந்தேறிய நியாயவாதப் பரீட்சையில் ஐந்து பெண்கள் முதல்தரமாகவும் எட்டுப் பெண்கள் இரண்டாந்தரமாகவும் தேறினார்கள்.

ஸ்பானிய அரசர்:—ஸ்பெயின்தேச அரசரும் அரசியும் இந்தமாதம் 19ஆ விசேஷ புகையிரதமார்க்கமாக ரோமபுரியை அடைந்து இத்தாலிய அரசராலும் அரசியாலும் நல்வரவேற்கப்பட்டார்கள்.

புகைக்கப்பல் ஆழிவாய்ப்பட்டமை:-கெட்டால் மொம்பாசா முதலிய இடங்களிலிருந்து கொப்பருவும் கிழக்கிந்திய சாமான்களும் ஏற்றிக்கொண்டு லண்டனுக்குப் புறப்பட்ட 'றஸ்ப கோக்' என்னும் டச் புகைக்கப்பல் ஆழிவாய்ப்பட்டது.

### சாவகச்சேரி சைவ இங்கிலிஷ் கலாசாலை.

இக்கலாசாலையின் இரண்டாம்வருடாந்தக்கொண்டாட்டமும் பரிசளிப்பும் சென்ற ஐப்பசிமீ 25ஆ (10-11-23) சனிக்கிழமை சாயந்தரம் 4½ மணி தொடக்கம் ஸேர் பொ. இராமநாதன் அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் நடைபெற்றது. கௌரவ ஸேர் கனகசபையவர்கள் முதலிய பலசைவப்பிரபுக்கள் சமுகமாயிருக்கத் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பிக்கவே பக்கவாத்திய சகிதமாக மங்கலவாழ்த்துக் கவிகள் மாணவராற் பாடப்பட்டன. தென்மராட்சி மணியகாரனாயிருந்த ஸ்ரீ ம. முத்துக்குமாரசுவாமிமுதலியாரவர்கள் கௌரவ ஸேர் இராமநாதனவர்கள் சமுகத்திற்கு எழுதியமங்களோபசாரபத்திரத்தை வாசித்து, அதன் கருத்தையும் தென்மராட்சியின் நிலையையும் தமிழில் எடுத்துரைத்தனர். பின்பு ஸேர் இராமநாதனவர்களாற் பரிசுகள் கொடுக்கப்பட்டன. அக்கிராசனராலும், ஸேர் கனகசபையவர்களாலும் கௌரவ துரைசுவாமியவர்களாலும் ஸ்ரீமாந் அ. சபாபதி முதலியவர்களாலும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. உபந்நியாசகர் ஒவ்வொருவரும் சைவப்பிள்ளைகளுக்கு மிஷனரிமாரின் கல்வியால் ஏற்படும் நஷ்டங்களை யெடுத்துக்காட்டி, அவர்கள் சைவப்பள்ளிக்கூடங்களிலேயே கற்றல் வேண்டும் என்பதை நன்கு விரித்துக் கூறினர். ஈற்றில் மேற்படி கலாசாலைத் தலைமை ஆசிரியரால் சபையோர்க்கு நன்றி கூறப்பட்டபின்பு தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது. கடித.

### கேய்ஸரால் வெளியிடப்பட்ட நிருபம்.

மாஜி கெய்சர் வெளியிட்ட ஓர்அறிக்கையில் பின்வருமாறு சொல்லுகிறார்:— இளவரசரின் யாத்திரை எனக்குத் தெரியாமலே ஏற்பாடு செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. எல்லை தாண்டியபிறகே இளவரசர் எனக்குவந்தனக் கடிதத்தை அனுப்பினார். உத்தரவுச் சீட்டுடன் எந்தத் துதனும் ஜெர்மன் எல்லைக்குள் பிரவேசிக்கவில்லை. திரும்பவும் அரசாங்கர்தாபிக்க ஒரு கட்சி உண்டென்பதே எனக்குத் தெரியாது. என்னைக் கேட்டிருந்தால், இப்போது ஜர்மனி பல உள்நாட்டுக் குழப்பங்களால் கஷ்டப்படுகையில் மாஜி இளவரசர் அங்குச்செல்லக்கூடாதென்று தடுத்திருப்பேன்.

### பிரிட்டன் தேசத்தின் அபிப்பிராயம்.

ஜர்மனிக்கு விரோதமாக நடவடிக்கை யெடுப்பதில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமேற்பட்ட அபிப்பிராய பேதத்தைப்பற்றிய விபரம் கலகத்திற்கு இடம் தரவில்லை. இத்தாலியும் பிரிட்டனும் பிரான்சின்செய்கையில்ஒன்றுசேரமாட்டாவென்று பாரிஸில் நினைக்கிறார்கள். பிரான்சு, பெல்ஜியம் என்ற தேசங்களின் அமைதிக்கு பயம் ஏற்படும் வரையில் ரைன்லாந்தும் ரூர் பிரதேசமும் காலி செய்யப்படமாட்டா என்ற விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது காலத்திற்கு எல்லையே கிடையாது என்பதுதான் கருத்து. இளவரசர் விஷயமாகவும் இராணுவ நிர்வாக விஷயமாகவும் ஜர்மன் செய்த காரியம் கண்டிக்கத்தகுந்த தென்றும் ஆனால் அவசரப்பட்ட காரியங்கள் செய்யலாகாதென்றும் பிரிட்டன் அபிப்பிராயப்படுகிறது. நன்றாக ஆலோசித்துக் கூடியவரையில் ஐக்கியமாகவே காரியங்களை நடத்தவேண்டுமென்று எல்லோரும் அறிகிறார்கள்.

### பார்லிமேன்டேச் சபையில் மன்னர்பிரானுடைய பேச்சு.

பார்லிமெண்டைக் கலைக்கப்போகும் தறுவாயில் மன்னர்பிரான் பல விஷயங்களைப்பற்றியும் பேசினார். நஷ்டஈட்டுக்கமிஷன் விசாரணைக்கு ஏற்பட்ட திட்டங்களுக்கு பிரஞ்சு அரசாங்கத்தார் அனுமதி கொடாததற்காக வருந்தினார். ஐரோப்பாவின் தற்கால செல்வ நிலையைப்பற்றி ஆழ்ந்த கவலையைச் செலுத்தி ஜர்மனியில் இப்போது உண்டாகியிருக்கும் நெருக்கடியான நிலைமையைப்பற்றி கவர்ன்மெண்டார் கவனம் செலுத்தி வருவதாகக் கூறினார். லூஸேன் உடன்படிக்கையானது சமீபக் கிழக்குதிசையில் உண்மையான அமைதியை நிலைநிறுத்தும் என்று நம்புவதாகக் கூறினார். அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்குள் ஒழுங்கீனமாக மது இறக்கும் விஷயமாக அத்தேச அரசாங்கத்தாருடன் கடிதப் போக்குவரவு நடந்துகொண்டிருக்கிறதென்று குறிப்பிட்டார். ஜப்பான் தேசத்திற்கு ஏற்பட்ட ஆபத்தைக் குறித்து வருந்தி 'அத்தேச கவர்ன்மெண்டாரிடத்திலும் ஜனங்களிடத்திலும் தமது தேசம் மனப்பூர்வமான அனுதாபம் காட்டுகிறதென்று வெளியிட்டார். நமது நேசர்களாகவும் சிநேகிதர்களாகவுமிருக்கும் தேசம் இந்த ஆபத்தைப் பொறுமையுடனும் தீரத்துடனும் சகித்து நிற்கிறது என்றார். சுய ஆட்சி பெற்ற குடியேற்ற நாடுகளின் மந்திரிகளும் இந்தியாவின் பிரதிநிதிகளும் அடங்கிய மகாநாடுகள் கூட்டிப் பேசியதன் பயன் மிகுதியுமுண்டு என்றும் மகாநாடு முழுமையும் ஒருவருக்கொருவர் அன்பும் நல்லெண்ணமும்குடிகொண்டு விளங்கிற்று என்றும் எடுத்துரைத்தார். ஏகாதிபத்தியத்தின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தவும் விர்த்திசெய்யவும் கவனஞ் செலுத்தப்பட்டது. வர்த்தகச் செழிப்பிலேதான் என் பிரஜைகளின் க்ஷேமம் அமைந்திருக்கிறது. பிரிட்டன் தேசத்திலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற என் சனங்களுக்குள் ஒத்துழைக்குங் குணம் விருத்தியாவதற்கு இவ்விதக் கூட்டங்கள் சாதனமாக இருக்குமென்றே நம்புகின்றேன்' என்று கூறினார். முடிவில் விவசாய நிலைமையைப்பற்றியும் தொழிலற்றவர்களின் கதியைப் பற்றியும் வருந்தினார். தேசத்து வர்த்தகத்தை ரக்ஷித்து விர்த்திசெய்தாலொழிய சாசுவதமான பயன் எதுவும் ஏற்படாது என்று என் மந்திரிகள் கருதுகின்றனர் என்று கூறினார். லூஸேன் உடன்படிக்கையில் கண்ட சிலவிவரங்களை நடவடிக்கைக்குக் கொண்டுவர ஒரு மசோதா கூடிய சீக்கிரம் பார்லிமெண்டில் கொண்டுவரப்படும் என்றார். இந்த உடன்படிக்கையானது துருக்கிக்கும் துருக்கியைச் சேர்ந்த தேசங்களுக்கும் அமைதியைக் கொடுக்குமென்று மனமார நம்புவதாகத் தெரிவித்தார். —நவசக்தி.

## இந்திய சமாசாரம்.

### ஒரு பிரபல ஜமீன்தார் சுடப்பட்டார்.

வடக்கே பிரபல ஜமீன்தாராகிய சௌதிரி ஜெகந்நாதசிங்கும் ஒரு மாதும் ஓன்றாயிருக்கையில் அவர்கள் சுடப்பட்டார்கள். அவர்கள் அவ்வாறு இருந்ததைக்கண்ட மேற்படி மாதின் சகோதரர், மேற்படி ஜமீன்தாரின் துப்பாக்கியை எடுத்து அதனால் முதலில் ஜமீன்தாரையும் பிறகு தம்முடைய சகோதரியையுஞ்சுட்டாரென்று கூறப்படுகிறது. அவர்கள் இருவரும் உடனே மரணமடைந்தனர். மேற்படி சகோதரர் எங்கேயோ ஒளிந்துகொண்டிருக்கின்றார்.

### ஒரு ஜமீன்தார் கோல்லப்பட்டார்.

அமிர்தசரசுக்கு மூன்று மைலுக்கப்பாலுள்ள மஹான் என்னும் கிராமத்தின் ஜமீன்தார் சென்றமாதக் கடைசியில் கொல்லப்பட்டார். அவருக்கும் கிராமவாசிகளில் சிலருக்கும் ஏற்பட்டிருந்த பணலாவா தேவியின் காரணமாக அவர் அவர்கள்மீது கோர்ட்டில் வழக்குத் தொடுத்ததனால் அவர்களுக்கும் அவருக்கும் விரோதம் ஏற்பட்டது. ஒருநாள் அவர்கள் பணம் விஷயமாக ஒரு முடிவு செய்வதாகக் கூறி அவரை ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர் சிலதினங்களாகத் தம்வீட்டுக்குச்செல்லாததனால், விஷயம் போலீசாருக்குத் தெரிவிக்கப்பட, அவர்கள் கோதுமை விளைந்திருந்த ஒரு வயலைக்கிளறி அங்கிருந்து அவருடைய கால்கள், கைகள், தலைமுதலிய உறுப்புகளைக் கண்டெடுத்தார்கள். அவைகள் தனித்தனியாக இருந்தன. அவருக்கும் கிராம வாசிகளுக்கும் இருந்த விரோதத்தினால் அவர் கொல்லப் பட்டதாகக் கூறப்படுகிறது. அவருடன் சென்றவர்களில் ஐவர் பிடிக்கப்பட்டனர்.

### விசாக பட்டினத்தில் சுழல்காற்றும் மழையும்.

விசாக பட்டினத்தில் 17ஆ இரவு பெருமழை பெய்ததுமன்றி கடுமையான சுழல்காற்றும் அடித்தது. அதன் பயனாகப் புகைரதப் பாதைத் தண்டவாளங்களிற் பல உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. வால்டேருக்குத் தென்பாகத்திலுள்ள ரஸ்தாக்களில் போக்குவரத்து செய்யமுடியாதபடி பல சேதங்கள் விளைந்திருக்கின்றன. வால்டேருக்குத் தெற்கிலுள்ள தந்திப் போக்கு வரத்துகள் அறுக்கப்பட்டுப் போயின. கல்கத்தாவுக்கும் சென்னைக்கும் நேராகத் தந்திப் போக்கு வரத்தும் தபால் போக்கு வரத்தும் செய்ய முடியாமலிருக்கின்றது. 19-ந் தேதி காற்றும் மழையும் நின்றுவிட்டன. சென்னையிலிருந்து வருகின்ற புகைவண்டிகள் வால்டேருக்குத் தெற்கில் 6 மைல் தூரத்திலுள்ள அனகபள்ளிக்கப்பால் செல்ல முடியவில்லை கல்கத்தாவுக்கு 17ஆ சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்ற தபால்வண்டி அனகபள்ளிக்கப்பாற் செல்ல முடியவில்லை. ஒருவாரம் வரையில் கல்கத்தாவுக்கும் சென்னைக்கும் போக்குவரத்து நடைபெற முடியாதென்று தெரிகிறது. —நவசக்தி.

### தகப்பன் மகனைக் கோன்றமை.

தென்மலையாளம் திருருகருச்சமீபமாகவுள்ள கொலுக்காத்தூர் என்னும் கிராமத்திலே பரிதாபமான ஒரு கொலை செய்யப்பட்டதாகச் செய்தி எட்டுகின்றது. கொலையுண்டவன் ஒரு மாப்பிள்ளைச் சமூகத்தைச் சேர்ந்தவன். அவன் தனது தகப்பனாலும் மாற்றாந் தாயினாலும் கழுத்தை நெருக்கிக் கொல்லப்பட்டிருக்கின்றான். மகனைக் கொலைசெய்தவர் வீரன் குட்டி என்னும் செல்வமும் பிரக்யாதியுமுடைய ஒரு வியாபாரியாவரென்றும், இவர் தமது மூத்த மனைவியை விவாக நீக்கம் செய்துவிட்டு இரண்டாவது மனைவியை மணம்புரிந்துகொண்டாரென்றும், மூத்த மனைவிக்குப் புத்திரன் இருந்தபடியால் அவனே எல்லாச்சொத்தையும்அடைந்துவிடுவான் என்று பொறாமைகொண்டு இரண்டாவது மனைவி அந்தச் சிறுவனைக் கொலை செய்வதற்காக வேண்டிய விஷயங்களைச் செய்துகொண்டு வந்தாளென்றும், தகப்பனுக்கும் மகனுக்கும் விரோத உணர்ச்சியை உண்டுபண்ணிக்கொண்டு வந்தாளென்றும், கடைசியில் அவளுங் கணவனுஞ் சேர்ந்து மகனைக் கொலை செய்யத் தீர்மானித்தார்களென்றும் விசாரித்த வரையில் தெரியவருகின்றது. அடுத்த நாள் இரவில் அந்தச் சிறுவன் தூங்கிக்கொண்டிருக்கும்போது இருவர்களுஞ் சேர்ந்து ஒரு துணியைக் கொண்டு கழுத்தை இறுகக் கட்டி உயிரைப் போக்கி அந்தப் பிரேதத்தை அவர்களது வீட்டின் தோட்டத்தில் புதைத்துவிட்டு அவ்விடத்தில் செடியை வைத்துப் புதைத்தவிடம் தெரியாமற் செய்துவிட்டார்கள். அடுத்தநாட் காலையில் தனது மகன் தனக்குத் தெரியாமல் பணத்தை எடுத்துக்கொண்டு எவ்விடமோ சென்றுவிட்டானென்று தகப்பன் தெரிவித்துவிட்டான். இதைப்பற்றிப் பொலீசார் மிக்க ஊக்கமாக விசாரணை செய்ததில் உண்மை வெளியாயிற்று. பிரேதம் அந்த இடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டதுமன்றிக் கொலைசெய்தவர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். —திராவிடன்.

## கடிதம்.

### சோமவார விரத உத்தியாபனம்.

சோமவார விரத உத்தியாபனஞ்செய்வோர் வெள்ளியினாலேனுஞ்செம்பினாலேனும் சிவப்பிரதிமையும் தேவிப்பிரதிமையும் சிற்பியைக்கொண்டு செய்விக்க. பிரதிமைக்கு முப்பது கழஞ்சு உத்தமம். இருபது கழஞ்சு மத்திமம். பத்துக் கழஞ்சு அதமம். சிவப்பிரதிமை ஒருமுகமும், மூன்று கண்களும், நான்குபுயங்களும், நான்கு கைகளிலும் மான் மழு அபயம் வரதங்களும், முடியிலே பாலசந்திரனும் உடையதாகச் செய்விக்க. தேவிப் பிரதிமை ஒரு முகமும், இரண்டு தோள்களும் உடையதாகவும், வலக்கை செங்கழுநீர் பிடித்ததாகவும், இடக்கை கீழே நீட்டினதாகவும் செய்விக்க. யாகமண்டபமும், அதிலே குண்ட மண்டல வேதிகைகளும் விதிப்படி செய்விக்க. பானுவாரத்திலே ஒருபொழுதுண்டு, இரவில் உணவின்றித் தரையிலே துயின்று, சோமவாரத்திலே பிராதக்காலத்திலே நித்தியகருமத்தை முடித்து, மத்தியான்னந் தொடங்கிச் சாயங்காலம்வரையும் சிவபுராணங் கேட்டு, சாயங்காலந் தொடங்கி நான்கு யாமமும் மண்டலத்திலும், கும்பத்திலும், சிவலிங்கத்திலும் சிவபெருமானைப் பூசைபண்ணுக. சந்நிதியிலே பிரதிமைகளையும் வைத்துப் பூசை பண்ணுக. அவ்வப்பூசை முடிவிலே சிவமூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தினாலே நூற்றெட்டு ஆகுதி யாமந்தோறும் பண்ணுக. ஆயிரம் நாமஞ்சொல்லி ஆயிரம் வில்வஞ் சாத்துக. பஞ்சாட்சரத்தினாலே அருக்கியங் கொடுக்க. மூலமந்திரத்தினாலும் மற்றைய மந்திரங்களினாலும் அக்கினியைவளர்த்து பூரணாகுதிசெய்து வேள்வியைமுடிக்க. விடிந்தபின் நித்தியகருமங்களை முடித்து பதின்மூன்று வாழையிலையின்மேல் அரிசியும் காய்கறிகளும் பரப்பி, பசுவின்பால் நிறைந்த வெள்ளிவஸ்திரத்தினால் அலங்கரிக்கப்பட்ட பதின்மூன்று குடங்களை அரிசிமேல்வைத்து, சிவார்ச்சனைக்குரிய சிவப்பிராமணர்களை வரித்து, காதணியும் மோதிரமும் கொடுத்து, சிவனாக மதித்துப் பூசித்து, தக்கிணையோடும் வெள்ளைப் பசு, பாதகுறடு, விசிறி, குடை, வஸ்திரம் முதலியவற்றை தானஞ்செய்க. பின்பு குருவை அவர் பத்தினியோடும் ஆசனத்திருத்தி, சிவபெருமானும் உமாதேவியாருமாக மதித்து, அவர்களைப் பீதாம்பரம் காதணி மோதிரம் முதலியவற்றால் அலங்கரித்து, மலரினாலே பூசித்து, சிவபெருமானையும் உமாதேவியாரையும் ஆவாகித்து, பூசைசெய்த வெள்ளி அல்லது செம்புப் பிரதிமையோடும், பொன் பூமி பசு முதலியவற்றைத் தானஞ்செய்து, இவ்வாறே உத்தியாபனம் முடித்து, குருவினுடைய ஏவலினாலே சிவனடியார்களோடும் சுற்றத்தாரோடும் அமுது கொள்ளுக.

இங்ஙனம்.
S. V. R. M.

### சைவாபிமானிகட்கு:

ஐயன்மீர்,

இற்றைக்கு நூறு வருடங்கட்கு முன் அந்நிய மதத்தாராகிய பாதிரிமார்கள் மேற்கு நாடுகளிலிருந்து எங்கள் தேசத்திற்குத் தங்கள் மதங்களைப் பரப்புவதற்காக வந்தார்கள். அவர்கள் தங்கள் சமயங்களைப் பரப்புவதற்காகவே பாடசாலைகளை ஸ்தாபித்து அப்பாடசாலைகளில் எங்கள்சிறுவருக்குக் கல்விபூட்டுவதாகக் கூறித் தங்கள் சமயங்களை வளர்த்து வந்தார்கள். இதையறிந்த அபிமானிகளிற் சிலர் தத்தம் கிராமங்களிற் சைவப் பாடசாலைகளைத் தொடக்கி அப்பாடசாலைகளிலேயே சைவப் பிள்ளைகள் கல்வி கற்கும்படியான ஒழுங்குகளைச் செய்தார்கள். சைவப்பாடசாலைகளும் கிறீஸ்தவ பாடசாலைகளும் அரசாட்சியார் உதவும் பணத்தைக் கொண்டே நடத்தப்பட்டு வருகின்றன. இப்பணம் அரசாட்சியார் நம்மிடம் இருந்து வசூலிக்கும் வரியி னொருபகுதியே யொழிய வேறன்று. ஆயின் இலங்கையில் வரி கொடுக்கும் நூறு பெயரில் தொண்ணூறு பெயர்கள் கிறீஸ்தவரல்லாதாராயிருக்க இத்தொண்ணூறு பெயர்களுக்கு மிடையே கல்வியிற்ற ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளின்றொகை மிகவுங் குறைவாகவே காணப்படுகின்றது. முற்கூறியவாறு நூற்றில் பதின்மரே கிறீஸ்தவமதத்தாராயினும் கிறீஸ்தவ பாடசாலைகள் நூற்றுக்கு எண்பது வீதங் காணப்படுகின்றன. நூற்றுக்குப் பத்து வீதக் கிறீஸ்தவருக்கு 80வீதப் பாடசாலைகளென்? நூற்றுக்குப் பத்துவீதமுள்ள கிறீஸ்தவரின் பிள்ளைகள் கற்பதற்கு நூற்றுக்குப் பத்துவீத கிறிஸ்தவ பாடசாலைகள் போதுமன்றோ? ஏனைய எழுபதுவீதப் பாடசாலைகளையும் சைவ அல்லதுபொதுத்த அல்லது மதமதிய பாடசாலைகளாகுவது நியாயமன்றோ? மேற்கூறியவாறு அபிமானிகளாற் றொடங்கப்பட்ட சைவப் பாடசாலைகளின் றொகை, நாளடைவிலதிகரிப்பதைக்கண்ட அரசாட்சியார் இப்போ இச்சங்கடங்களைத் தவிர்ப்பதற்காகத் தாம் தமது பாடசாலைகளைத் தொடங்குகிறதாகக் கூறுகிறார்கள், இவ்வாறு அரசாட்சியார் கூறினும் அவர்கள் தொடங்கும் பாடசாலைகள் தற்போது நடத்தப்படும் கிறீஸ்தவபாடசாலைகளை

யொருபோதுந் தாக்கமாட்டா. ஏனெனில் நம் யாழ்ப்பாணத்தில் சென்ற இரண்டு மூன்று வருடங்களுக்குள் அரசாட்சியார் ஏறக்குறைய பத்துப் பாடசாலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள். இப்பாடசாலைகள் அரசினர் பாடசாலைகளாக மாற்றப்படமுன் சைவப்பாடசாலைகளாக இருந்தன. இப்பாடசாலைகளிற் கல்வி கற்போர் சைவமானவரே. இப்பாடசாலைகள் சைவர் வசிக்கும் வட்டாரங்களிலேயே யிருந்தனவாம். இவ்வாறிருந்தும் அரசாட்சியார் இப்பாடசாலைகளைத் தமதாக்கிக்கொண்டனர். இதனாலும் சைவர் தம் சமயாபிவிருத்திக்காகத் தம் அரும்பொருளை யீட்டித் தம் பிரயாசத்தினுற் றனைத்தோங்கச்செய்த இப்பாடசாலைகளை அரசாட்சியார் கைப்பற்றுரே. இப்பாடசாலைகளை மாற்றினதற்குரிய நியாய மென்ன? அவைகள் சீருந் திறமுமுடையனவல்லவாம். அவ்வாறு திறமை வாய்ந்தனவல்லவாயின் அவைகளைத் திறப்படுத்திப் பெலப்படுத்தல் கடமையன்றே. இது நிற்க, சென்ற இரண்டு மூன்று வருடங்களாக அரசாட்சியார் நடாத்திவந்த முறையே யவர்கள் இனிமேலும் நடாத்தும் முறையாகும். அம்முறையை யனுஷ்டிப்பின் சைவப் பாடசாலைகளையே அரசாட்சியார் மேலும் மேலும் தமதாக்குவரொழிய ஏனைய பாடசாலைகளையன்று. அவ்வாறு நம் அரும் உயிர்நிலையங்களாகிய இக் கல்விக்கழகங்களை நாம் இழப்பதனிலும் உயிர்துறத்தல் நன்றன்றோ? ஆதலால் இனியாகுதல் நாம் நம் பாடசாலைகளை நடாத்தவும் சமயத்தைப் பரிபாலிப்பதற்கும் ஓர் சபையைத் தாபிக்கவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் பழைய சபைகட்குப் புத்துயிர் கொடுக்கவேண்டும் இதுதான் நெறி. இவ்வாறு இப்பாடசாலைகளைக் காப்பாற்றிக்கொண்டு ஏனைய 70 வீதப் பாடசாலைகளையும் நமதாக்குவோமாக.

வை: சி. சி து.

[புதிய சபைகளை ஸ்தாபிப்பதிலும் பார்க்க யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபையாரே இப்பாடசாலைகளின் பொறுப்பை ஏற்றுநடத்துதல் இயைபுடைத்தாம்.

பத்திராகிரியர்.]

## சுபோதத் துணுக்கைகள்.

பாவவழியை அகற்றிப் புண்ணிய நெறிகளிலீட்டப்பட்ட பொருளைத் தருமஞ் செய்யப்புகின் நீங்காத கடவுள் பக்தியுடையோர், என்றும் பஞ்சமாபாதகங்களையும் நீத்துச் சுசிசுத்தத்தோடு சன்மார்க்கநெறியி லொழுகுவோர், நீங்காத தரித்திர நிலையையுடையோர், தாய்தந்தையர், பாதுகாப்போரில்லாத அநாதைக் குழந்தைகள், தலைமயிர் கொக்கொக்க நரைத்துத் தடுமாற்றமடைந்த சத்தியற்ற விருத்தர், வாய்விட்டிரப்பதற்கு நாணி வயிற்றைப் பொறுத்து உள்ளதைக்கொண்டு மரியாதையைக் கைவிடாது காலங்கழிக்கும் மானத்துக்குக் கட்டுப்பட்டவர்கள், இன்னலுழந்த காலத்தில் தனக்கு வேண்டிய உதவிசெய்து பின்னால் கல்குரவடைந்தவர்கள் ஆகிய இத்தகையோர்க் கீவதே உத்தம கொடையாகும். கொடையினுடைய மகத்துவந் தெரியாமலும், சற்பாத்திரம் அசற்பாத்திரங்களின் தாரதம்மிய முணராமலும், எல்லாருங் கொடுக்கிறார்களே நாமுங் கொடுப்போமென்ற ஒரு தன்மையையே கருதிக் காலமல்லாத காலத்தில், இரப்போர்களுடைய மனம் வருந்தும்வண்ணம் வைது அடித்து உதைத்துக் "குளிக்கப்போய்ச் சேறு பூசியவனைப்போல" புகழ் ஒன்றையே பெறுபேறென நினைத்துக் கொடுப்பது மத்திமக் கொடையாகும்.

ஒருவரை முன்னிலையிற் புகழ்ந்து பேசி, போனபின் வடுமொழிகளால் தூற்றுகின்ற புறங்கூறுவோருக்கும், சுதேகிகளாயிருந்தும் தொழில் செய்யச் சோம்பலுற்றுப் பிரபுக்களிடத்திற் போய் இச்சகம் பேசி யாசகத் தொழிலால் வயிறு வளர்ப்போருக்கும், இராக்காலத்தில் திருட்டுத்தொழில்செய்து பகற்காலத்திற் சாதுக்கள்போல் வேடம் பூண்டு நடிப்போருக்கும், வேசிதாசி வீடுகட்குக் கும்பகோணத்து ஐயரைப்போலப் புரோக்கர்வேலைபார்த்துக்கொண்டு, உயர்ந்த வேட்டி சால்வைகள் தரித்து, "பால் மாட்டுக் கன்றுகளைமான" வைப்போந்து திரியும் உலுத்தருக்கும், மரியாதைக்குக் கட்டுப்பட்ட கல்விமற்றிவற்ற பிரபுக்களை வசைமொழிகளால் தூஷிப்பேனெனப் பயப்படுத்தி, மானங் கெட்டுவிடுமேயென அஞ்சி அவர்கள்கொடுக்கும் பொருளைக்கொண்டு வலிட்டுச் செல்லப்பிள்ளைகளாக வேஷமின்றிச் சீவிக்கும் பாவலருக்கும், துறவி வேடம் பூண்டு இளந் தோகையரின் மானத்தைக் கெடுக்கும் படிற்றொழுக்கமுடையராவருக்கும், பஞ்சபாதகங்களையும் அஞ்சாது புரியும் பாதகருக்கும், தனக்கொருவரு மிணையில்லையென்று ஒருவரையும் மதியாது தருக்குற்றுத் திரியுந் தீயருக்கும் கொடுப்பது அதமக் கொடையாகும். "ஆண்தன்மையற்ற நபுஞ்சகன் வேட்ட பெண்ணினை, எதிலான் அனுபவிப்பதுபோல" சிறிதில் வியர்வை உள்ளங்கால்விற்சிக்கப் பெரிதுஞ் சிரமப்பட்டுச் சம்பாதித்துத் தானும் முண்ணாமல், தருமமுஞ் செய்யாமல் சேமித்து வைக்கப்பட்ட திரவியத்தை, முற்சன்மத்தில் கொடுத்து வைத்த அன்னியரே அனுபவித்துத் தொலைப்பர் கசடறக் கற்ற கல்வி, தன்னையறியாது பிறர் நன்மைக்காக உழைத்தல், எந்தவித இன்னலைப்பினுங் கலங்காத திடசித்தம், எந்நேரத்திலும் மந்தகாசம் பொருந்திய வதனத்தோடு கூடிய சாந்தம் முதலிய நற்குணங்களினால் மாந்தரெங்கணுங் கீர்த்தியை விருவுக. மறுமைக்கு வழித்துணையாகத் தன்னோடு ஏதாவது பொருள் கொண்டுபோகவேண்டுமென்று விரும்பினால் திரிகரணசுத்தியோடு தருமஞ் செய்க. எல்லார்க்கும் நல்லவனாக வேண்டுமென்று விரும்பினால் செற்றத்தை அகற்றுக. ஒருவனுடைய குடும்பத்திலுள்ள பழிப்புரைகளைப் பேசுமிடத்தில் ஊமையாகவும், பிறரது ரகசியம் பேசுமிடத்தில் செவிடனாகவும், பிறன் பாரியைக் காணுமிடத்தில் குருடனாகவும் இருப்பானாயின், அவனுக்கு அறநெறி கூறவேண்டியதில்லை. தான் செய்த தருமத்தையும், தன்னிடத்துள்ள திரவியத்தையும், தன்னுடைய குடும்ப இலம்பாடுகளையும், தன்னுடைய வீரத்தையும், தன்னில்லாளோடனுபவித்த காமசுகத்தையும், குரு உபதேசத்தையும், தன்னுடைய வயதையும், தனக்குக் கடவுளிடத்துள்ள பக்தியையும் ஒருவருக்குஞ் சொல்லற்க. உங்களை யாவரும் உத்தம குணமுடையவரென வியக்கவேண்டுமென்று விரும்பினால், பிறரிடத்திற் பொருந்தியுள்ள நற்குணநற்செய்கைகள் முதலிய சிறப்புகளை பிரபல்யமாக வியந்து பேசி, அவரிடத்துள்ள குற்றங்களனைத்தையும் மறைத்து, எத்தகைய குறைந்த வருணத்தவரோடாவது கடிந்து பேசாது மிகவுந் தாழ்மையாக வசனித்து, அன்னியன் பன்னியை அன்னைபோல மதித்து, பிறர்க்குற்ற இடுக்கண் பிணி முதலியவைகளை உமக்கு வந்ததுபோலப் பாவித்து ஒழுகக் கடவீர்கள். (வரும்)

இங்ஙனம்,

க. வைத்தியலிங்கபிள்ளை,

வண்ணைநகர்.

## மதுவிற்பனை நிறுத்தப்பட வேண்டும்.

### மிஸ்டர் எலியட்டின் அபிப்பிராயம்

அமெரிக்கா தேசத்தில் மது விற்பனை நிறுத்தப்பட்டதனால் அங்குள்ள ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளைப்பற்றி மிஸ்டர் எலியட் ஒருஸ்திரீக்குப் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

அமெரிக்கா தேசத்தில் மது விற்பனை நிறுத்தப்பட்டதனால் அங்குள்ள ஜனங்கள் இப்போது முன்னைவிட அதிக சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். ஆண்மக்கள் தாங்கள் சம்பாதிக்கும் பொருளைத் தங்கள் காரியாலயத்திலிருந்து வீட்டுக்குச்செல்லுகையில் மதுவிஷயமாக முன்போல் செலவுசெய்யாமல் அதைத்தம் குடும்பத்தினர் விஷயமாக செலவு செய்து அவர்களுடன் சந்தோஷமாய் காலங்கழிக்கிறார்கள். அவர்களில் சிக்கனமாக வாழ்பவர்கள் பிரதிமாதம் கொஞ்சம் தொகையைச் சேமித்து அதைக் கொண்டு நாற்காலி மேஜை முதலிய மரச்சாமான்களும், தமக்கும் தம்குடும்பத்தாருக்கும் துணியும், சவுகரியமாகவும் சந்தோஷமாகவும் வசிப்பதற்கு வேண்டிய மற்றப் பொருள்களும் வாங்குகிறார்கள். அவர்களுடைய மனைவிமார்கள், ஒரு குடிகாரனுடைய மனைவிக்கு ஜனிக்கும் குழந்தைகளைப் போன்ற பலவீனமான குழந்தைகளையும் ரோகங்கொண்ட குழந்தைகளையும் இப்போது பெறுவதில்லை.

### மதுவிலக்கினால் பலமதிகம்.

மதுவிற்பனை நிறுத்தப்பட்டதனால் தொழிலாளர்களுக்குத் திறமை இப்போது அதிகப்பட்டிருப்பதாகவும், அவர்கள் இப்போது நாள் தவறாமல் கிரமமாக வேலைக்குச்செல்வதாகவும் செம்மையாக வேலை செய்வதாகவும், தொழிற்சாலையிலும், வீட்டிலும் அதிக சந்தோஷமாயிருப்பதாகவும் தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் கூறுகிறார்கள். அவர்கள் இப்போது நாட்டில் கிளர்ச்சி செய்பவர்களின் போதனைகளைக் கேட்பதில்லை யென்று அவர்களுடைய முதலாளிகள் கூறுகிறார்கள்.

மதுவிற்பனை நிறுத்தப்பட்டதனால் ஜனங்களின் தேக சுகம் முன்னைவிட இப்போது அதிக மேன்மையாயிருக்கிறது. பல அநுகூலங்களுடனும் சௌகரியங்களுடனும் செம்மையாக உண்டுஉடுத்தி ஒழுங்கான வீட்டில் வசிப்பதனால் மேன்மையான தேகசுகம் ஏற்படுகிறது. மதுவிற்பனை நிறுத்தப்பட்டதனால்ஜனங்களின் தேகசுகம் மேன்மைப் பட்டதற்கு இன்னொரு காரணமுள்ளது. ஜனங்களின் வாழ்க்கையைக் குறைப்பது வென்னை, அரையாப்புமுதலியரோகங்களாகும். மது உட்கொள்ளப் படுவதும் விபசாரமும் ஒன்றோடொன்று இணைந்ததாயிருக்கிறது. வேசி வீடு மது உட்கொள்ளப்படும் ஸ்தலமாயிருக்கிறது. மதுக்கடை விபசாரிகளுக்கு ஆகாரம் அளிக்கும் ஸ்தலமாயிருக்கிறது. மது விற்பனை செய்யப்படுமானுல் மது உட்கொள்ளும் வழக்கம் வாய்த்திராமல் அதிக அடக்கமாகவிருக்கும். ஒருகல்வியாளர் கூட பீர் விற்கப்படும் ஒரு நந்தவனத்திலோ அல்லது ஓர் ஒட்டலிலோ மாலை வேலையில் காலங்கழிக்கையில் அங்கு அப்போது மான அளவு மது உட்கொண்டு தம் இல்லத்திற்குச் செல்லுகையில் வழியில் ரோகங்கொண்ட ஓர் அழகிய வேசியினிடத்திற் சென்று, பிறகு சொல்லொணுத் துயரத்திற்குப் பாத்திரராகலாம். இப்போது இருக்கும் ஜனங்களுக்கு மது கிடைக்காத படிக்கும் பின் சந்ததியார்களுக்கு மதுவென்பது என்னவென்று தெரியாமலிருக்கும்படிக்கும் செய்யப்பட்டால் தான் ஸ்திரீ சம்பந்தமான ரோகத்தை நாட்டில் இருந்து ஒழிக்க முடியும்.

### பொருள் விருத்தி

அமெரிக்கா ஜனங்கள், தாங்கள் மதுவிஷயமாகப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்ததற்குப் பதிலாக அவைகளைச் சேமித்திருந்தால் ஜனங்களுக்கு மேன்மேலும் அதிக சந்தோஷம் ஏற்படும் படிக்கு யுத்தக்கடனும் வரிகளும் குறைவுபடக் கூடுமென்றும், நாட்டில் பள்ளிக்கூடங்களும், நந்தவனங்களும், விளையாட்டு மைதானங்களும், தோட்டங்களும் அதிகப்பட்டு மேன்மையான நிலைமையில் இருக்கக் கூடுமென்றும், புதிதாக பாதைகள் ஏற்படுத்தக் கூடுமென்றும், அறிய வருகின்றனர்.

குடிகாரர்கள் சச்சரவு விளைவிக்கக் கூடியவர்களாகவும், சண்டைபோடக் கூடியவர்களாகவும் ஒருவரைத் தாக்கக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆதிகாலத்தில் இங்கிலாந்து தேசத்தில் குடி புகுந்தவர்கள் மது உட்கொண்டதனால் நல்லொழுக்க மில்லாதவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் இளைஞர்கள் தலைமுறை தலைமுறையாகப் பல தலைமுறையாக படுக்கைக்குச் செல்லுமுன் மது உட்கொண்டனர். ஆதி காலத்தில் ஜனங்களுக்கும் அரசாங்கத்தாருக்கும் சண்டை நிகழ்ந்தபோது போர்வீரர்களுக்குப்பின்சென்ற பட்ளர்கள் அப்போர்வீரர்களுக்கு மது விற்றதையும் அப்போர்வீரர்களில் காயமடைந்தவர்களுக்கும் நோய்கண்டவர்களுக்கும் சிகிச்சைச் சாலைகளில் மதுகொடுக்கப்பட்டதையும் ஜனங்கள் நிறுத்தாததினுல் அதிக நஷ்டம் ஏற்பட்டது.

அமெரிக்கா ஜனங்கள், கூபா, பிலிப்பைனஸ் மெக்சிக்கன் எல்லைப்புறம், பனமா, சீனு ஆகிய இந்த இடங்களில் பலவிதமான பர்வகாலங்களில் தம் போர்வீரர்களை வைத்திருந்து அவர்களின் நடக்கைகளையும் குணங்களையும் கவனித்துப் பல விஷயங்கள் அறியலாயினர். போர்வீரர்கள் மது உட்கொள்ளாதவர்களாகவும் குறி ரோகம்பிடியாதவர்களாகவும் இருந்தால் அவர்கள் அதிக திறமைவாய்ந்தவர்களாயிருப்பார்களென்று அமெரிக்கா ஜனங்கள் அறியலாயினர். உலகத்தில் மற்ற நாட்டுப்போர்வீரர்களில் குறி ரோகங்கொண்டவர்களைவிட அமெரிக்கா போர்வீரர்களில் அனேகர் அந்தரோகங்கொண்டவர்களாயிருந்ததாகப் போர்வீரர் விவகார அதிபதி கவர்ன்மெண்ட் அறிக்கையில் வெளியிடப்பட்ட செய்தியை வாசித்த அமெரிக்கா ஜனங்கள் 1917-ம் வருடத்தில் தங்களுக்கும் ஜர்மனியர்களுக்கும் யுத்தம் நேரிட்டபோது தம் போர்வீரர்களுக்கு மது அளிக்கப்படக் கூடாதென்று ஒரு சட்டம் ஏற்படுத்தினர். அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டதனுல் அதிக அனுகூலம் ஏற்பட்டமையால், அமெரிக்காநாட்டில் மது விற்பனை நிறுத்தவேண்டுமென்று அவர்களுக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது.

### எல்லோருக்கும் உதித்தது

அந்த எண்ணம் அந்நாட்டில் எல்லாப் பாகங்களிலும் வசிக்கும் எல்லாவகுப்பார் உள்ளத்திலும் எழும்பியிருக்கிறது. அந்த எண்ணம் அவர்கள் உள்ளத்தில் அதிக உரமாக வேரூன்றியிருக்கிறது. மது விற்பனை செய்யப்படக்கூடாதென்று அந்நாட்டில் ஒவ்வோர் இராஜ்யத்திலும் சட்டம் ஏற்படும். அந்நாட்டார், தம்நாட்டில் மதுவிற்பனை நிறுத்தி, மது உட்கொள்ளுவதனுல் ஏற்படும் கெடுதிகள் ஏற்படாதபடி செய்து முன்னேற்ற மடையத் தீர்மானித்திருக்கிறார்கள். மதுவிற்பனையை நிறுத்துவதனுல் சிலருக்குக் கஷ்டம் ஏற்படக் கூடுமாயினும் அவ்வாறு செய்வது நியாயமான காரியமென்றும், அவ்வாறு செய்வதனுல் முதலில் சிலருக்குக் கஷ்டம் ஏற்பட்டபோதிலும் பிறகு அவர்களுக்கு அதிக அனுகூலம் ஏற்படுமென்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.

மதுவிற்பனையை நிறுத்தக்கூடாதென்றுகூறுபவர்கள், பலாத்காரத்தில் மது விற்பனை நிறுத்தப்பட்டதாக கூறுவது நிஜமல்ல. மது விற்பனை நிறுத்தப்படவேண்டுமென்னும் எண்ணம் ஜனங்களுக்கு நாளடைவில் ஏற்பட்டதாகும். நாட்டில் பல பாகங்களில் மது விற்பனை விஷயமாக, ஓர் ஊரில் மதுக்கடைகள் இருக்கலாமா இருக்கலாகாதா என்பதையும், இருப்பதாயிருந்தால் அவைகள் எத்தனை எங்கெங்கு அமைக்கப்படவேண்டுமென்பதையும் ஜனங்கள் தீர்மானித்தல், மது விற்கும் உரிமையை பெருத்த தொகைக்கு குத்தகைக்கு விடுதல், குறித்த காலத்தில் மதுக்கடைகளை மூடுதல் ஆகிய இந்த முறைகள் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன. ஆனுல் அந்த முறைகள் கையாளப்பட்டதனுல், மது உட்கொள்ளப்பட்டது குறையவில்லை

### என் அனுபவம்.

மது உட்கொள்ளப்படும் விஷயமாக எனக்குள்ள அநுபோகங்களையும் நான் அறிந்த சில விஷயங்களையும் இப்பொழுது எடுத்துக் கூற விரும்புகிறேன்.

வழக்கமாக உவையின் உட்கொண்டுவந்த ஒரு குடும்பத்தாரிடத்திலும், உவையின், பீர், சுத்தப்படுத்தப்பட்ட சாராயம் ஆகிய இந்த மூன்று விதமான பானங்கள் அருந்திய அனேக பந்து மித்திரர்கள் மத்தியிலும் நான் வளர்ந்து வந்தேன். மது உட்கொண்டதனுல் எனது அனேக பந்துமித்திரர்கள் பல கஷ்டங்களுக்குப் பாத்திரரானதைக் கண்ணுரப் பார்த்தேன். நான் ஒரு கூட்டத்தாருடன் இருக்கையில் நானும் பீரும் உவையினும் அருந்தினேன் ஆனுல் எனக்கு யாதொருவிதமான உற்சாகமும் ஏற்படவில்லை; நான் 19-வது வயதுமுதல் 21-வது வயதுவரையில் அரிதாகச் சில சமயங்களில் சிகரெட்டுப் பிடித்தேன். ஆனுல் நான் எக்காலத்திலும் புகையிலையை எந்த ரூபத்திலும் வேண்டவில்லை.

யுத்தத்திற்குப் பிரான்சு தேசத்திற்குச் சென்ற நம் போர்வீரர்கள் மது அருந்தக்கூடாதென்று நிபந்தனை ஏற்பட்டதனுல் நான் 1917-ம் வருடத்தில் ஏப்ரல் மாதத்தில் 83-வது வயதில் மது அருந்துவதை விட்டுவிட்டேன். அது முதல் நான் மது உட்கொள்ளாமலிருப்பதனுல் வேலை செய்வதற்கு சக்தி அதிகமாக ஏற்படுகிறதென்றும், சந்தோஷம் எவ்வகையிலும் குறைவுபடவில்லையென்றும் அறியலானேன்.

—"நவசக்தி"


## விளம்பரம்.

### தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீழம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

(H. 16) S. வீரகத்திப்பிள்ளை, தொண்டமானுறு.

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈருக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்" ஆபீஸ், திருச்சி.

## புத்தக விளம்பரம்.

### கதிர்காம வேலவர் பதிகம்.

இஃது, நவாலி க. சரவணமுத்து ஆகிய நான் வேண்டிக்கொண்டபடி, எனது ஆசிரியரும் சகோதரருமாகிய நவாலி திரு. க. சோமசுந்தர உபாத்தியாயர் அவர்களால் இயற்றப்பட்டது. பதிகத்திலுள்ள பாக்கள், சைவசமய அன்பர்களது மனத்தை உருகச்செய்து, கதிர்காமப் பெருமான்மீது மெய்யன்பு பெருகச்செய்யும் பான்மையுடையன. புத்தகம் ஒன்றின் விலை சதம் 12. (அணு 2) வேண்டுவோர் தமியேனிடத்திலும், க. சோமசுந்தரஉபாத்தியாயர், நவாலி வடக்கு, மானிப்பாய் என்ற விலாசத்திற்கும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். புத்தக வியாபாரிகட்குத் தக்க கழிவு கொடுக்கப்படும். தபாற்செலவு வேறு.

ஒரு போஸ் கார்ட்டில் ஒரு பக்கத்தில் (மாத்திரம்) மையினுல், நேராகவும் உறுப்பாகவும், சிறு எழுத்தில் சிவ, சிவ என்று 1108-த் தரத்திற்குக் குறையாமல் எழுதி கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பும் ஒவ்வொரு சைவசமய அன்பர்கட்கும் மேற்படி புத்தகத்திலொன்று உபகாரமாக அன்புடன் அனுப்பப்படும். அங்ஙனம் எழுதுவோர், தயைகூர்ந்து தங்கள் விலாசங்களைத் தெளிவாகப் போஸ்கார்ட்டின் மறுபக்கத்தில் எழுதிவிடுதல்வேண்டும்.

க. சரவணமுத்து, Orion Estate, Gampola.

(Mis. 407.)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.